# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

1969 to 2029 ECHO OF HIS CALL SINCE 1969

**India's National Spiritual Newspaper**

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

**Vol. XXXI** YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 JUNE **No. 06**


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

**ஏசாயா 54:13-17**

13. உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்த
ரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்;
உன் பிள்ளைகளுடைய சமாதானம்
பெரிதாயிருக்கும்.

14. நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்;
கொடுமைக்குத் தூரமாவாய்;
பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத்
தூரமாவாய், அது உன்னை
அணுகுவதில்லை.

15. இதோ, உனக்கு விரோதமாய்க்
கூட்டங்கூடினால், அது என்னாலே
கூடுகிற கூட்டமல்ல; எவர்கள்
உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்
களோ, அவர்கள் உன் பட்சத்தில்
வருவார்கள்.

16. இதோ, கரிநெருப்பை ஊதி, தன் கிரி
யைக்கான ஆயுதத்தை உண்டு
பண்ணுகிற கொல்லனையும் நான்
சிருஷ்டித்தேன்; கெடுத்து நிக்கிரக
மாக்குகிறவனையும் நான் சிருஷ்டித்
தேன்.

17. உனக்கு விரோதமாய் உருவாக்கப்
படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே
போம்; உனக்கு விரோதமாய்
நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும்
நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தரு
டைய ஊழியக்காரரின் சுதந்திரமும்,
என்னாலுண்டான அவர்களுடைய
நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர்
சொல்லுகிறார்.

## மற்றவர்கள் உங்களை சேதப்படுத்த தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்!

## GOD WILL NOT ALLOW OTHERS TO HARM YOU!

சகோதரி ஏஞ்சலின்



உலகெங்கிலும் உள்ள நம் **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தார் அனைவருக்கும், நம் ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அற்புதமான நாமத்தினாலே வாழ்த்துக்கள். நம்முடைய **அழைப்பின் எதிரொலி** இதழின் வாயிலாக மீண்டும் ஒருமுறை உங்களோடு இணைவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. சமாதானத்தையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன், நம் ஒவ்வொருவரையும் தொடர்ந்து வழிநடத்திக் காப்பாராக!

அண்மையில், நான் யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றி வாசித்துக் கொண்டிருந்த போது, **உங்கள் தகப்பனோ, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்து முறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங் கொடுக்கவில்லை.** ஆதியாகமம் 31:7 என்ற வசனத்தால் ஆழமாகத் தொடப்பட்டேன்.



**எனக்குத் தீங்குசெய்ய தேவன் யாருக்கும் இடங் கொடுக்கவில்லை**

எத்துணை வல்லமையான ஒரு சாட்சி இது! "மனிதன் என்னைச் சேதப்படுத்தவோ, அல்லது சாத்தான் எனக்கோ என் குடும்பத்திற்கோ எதிராக வெற்றிபெறவோ தேவன் அனுமதிக்கவில்லை" எனும் இவ்வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்ப்பதே மிகுந்த

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி! கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

ஆங்கிலம், இந்தி மொழிகளில் – அதிகாலை 1.00 மணி முதல்

தமிழ், தெலுங்கு மொழிகளில் – அதிகாலை 2.00 மணி முதல்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



... உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். - நீதிமொழிகள் 3:10.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை நிறைந்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்!

இந்த நாட்களில் நம் எல்லா ஊழியப் பிரிவுகளிலும் பெரிய ஆவிக்குரிய அறுவடைகளைக் காண்கிறோம். நம் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சபைகள்** ஆகிய எல்லா ஊழியங்கள் மூலம் ஏராளம் மக்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் சந்திக்கப்பட்டுள்ளனர்.



நமது செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி பணியாளர்கள்

கடந்த ஏப்ரல் மாதத்தில் 17–ம் தேதி முதல் 21–ம் தேதி வரை நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** வளாகத்தில் நடந்த நமது சிறு பிள்ளைகளுக்கான வேனிற்கால சிறுவர் வேதாகமப் பள்ளியில் ஏராளமான பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. பிள்ளைகள் கர்த்தருக்குள் வழி நடத்தப்பட்டார்கள். ஏராளம் சகோதர சகோதரிகள் முன்வந்து பிள்ளைகளுக்கு வேத வசனங்களைக் கற்றுக் கொடுத்தனர். தொடர்ந்து இவ்வித வேதபாட வகுப்புகள் வருகிற மே மாதம் 5–ம் தேதி முதல்



சிறு பிள்ளைகளுக்கான வேனிற்கால சிறுவர் வேதாகமப் பள்ளி – சந்தோஷபுரம் திருச்சபை

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A, M.Sc(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc, M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech, M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

**EDITOR, PUBLISHER & PRINTER**



Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**
Echo of His Call



Our Ministries: ▢ ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▢ BIBLECOR - Postal Courses (3 languages) ▢ YouTube Ministry ▢ Online Courses ▢ Theological Correspondence Courses (2 languages) ▢ Church Planting ▢ Nehemiah Bible Colleges ▢ Gospel Printing Press ▢ Great Commission Partners ▢ St. Paul's Matriculation School ▢ Crusades ▢ Community Development

10–ம் தேதி வரை நமது சேப்பாக்கம் தலைமைச் சபையிலும், மே மாதம் 11–ம் தேதி முதல் 17–ம் தேதி வரை பாலாஜி நகர் மற்றும் வேளச்சேரி சபைகளிலும் நடைபெற்றது..

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** அரசாங்க உத்தரவுப்படி வருகிற ஜூன் முதல் வாரம் திறக்கப்படவிருக்கிறது. படிக்கிற பிள்ளைகளுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** வருகிற 2026–ம் ஆண்டு வகுப்புகள் ஜூன் 1–ம் தேதி ஆரம்பிக்கப்படும். தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** 30–05–2026 உடன் முடியும் 2025–2026 –ம் கல்வி ஆண்டின் பட்டமளிப்பு விழா வருகிற ஜூலை மாதம் 4–ம் தேதி மாலை 5.00 மணிக்கு, புரசைவாக்கம், ரித்தர்டன் ரோடு, M.R.C. சென்டர், பாலர் கல்வி நிலையம், ஸ்கிட்மோர் ஹாலில் வைத்து நடைபெறும்.

எல்லா ஊழியங்களிலும் ஈடுபட்டுள்ள நமது உடன் ஊழியர்களுக்காகவும், ஊழியத் தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அன்புடன் வரவேற்கிறோம். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக, ஆமென்.

**கிறிஸ்து இயேசுவுக்குள்**
**உங்கள் சகோதரரான,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

ஆறுதலைத் தருகிறது. இந்த வாக்குத்தத்தத்தை நீங்களும் உங்களுக்கென்று சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

**தேவன் யாரையும் எனக்குத் தீங்கு செய்ய அனுமதிக்கவில்லை!**

இது, ஆசீர்வாதத்தைத் தேடும் முயற்சியில், ஒரு காலத்தில் தன் சகோதரனை ஏமாற்றியவனாகவும், தன் தகப்பனைத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டவனாகவும், மற்றவர்களை வஞ்சித்தவனாகவும் இருந்த ஒரு மனிதன் கூறிய மிக ஆழமான கூற்றாகும். ஆயினும், யாக்கோபின் வாழ்க்கையில் ஒரு அசாதாரணமான நிகழ்வு நடந்தது. மனிதத் தந்திரங்களின் மூலம் ஆசீர்வாதத்தைத் தேடிய ஒருவனாய் இருந்த அவன், உண்மையான ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக தேவனோடு போராடும் ஒரு மனிதனாக மாறினான்.

யாக்கோபின் வாழ்க்கை உண்மையிலேயே மிகவும் விறுவிறுப்பானது. ஏமாற்றுபவனே ஏமாற்றப்படுபவனாக மாறும் ஒரு பயணம் இது; ஒரு காலத்தில் தந்திரமாகச் செயல்பட்டவன், இறுதியில் பணிவுள்ளவனாய் மாற்றப்படும் ஒரு பயணம். யாக்கோபின் குறைகள், தோல்விகள் மற்றும் போராட்டங்கள் மத்தியிலும், தேவன் அவனோடு கூடவே இருந்தார். யாக்கோபின் தவறுகள் மற்றும் முழுமையற்றத் தீர்மானங்கள் வாயிலாகக் கூட, தேவன் தம்முடைய நோக்கத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டே இருந்தார்.

நாம் ஆதியாகமம் 31–ஐ வாசிக்கும் போது, தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு சூழ்நிலையையும் பயன்படுத்திக் கொள்ள வல்லவர் எனும் ஒரு வல்லமையான சத்தியத்தைக் காண்கிறோம்:

யாக்கோபு ஓடிக்கொண்டிருந்தபோதோ, போராடிக் கொண்டிருந்தபோதோ அல்லது பயத்தினால் உந்தப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருந்தபோதோ கூட, தேவன் அவனை வழிநடத்திக் கொண்டும், பாதுகாத்துக் கொண்டும், அவனது விதியை வடிவமைத்துக் கொண்டும் இருந்தார். அவருடைய பார்வையிலிருந்து எதுவும் தப்பிச் செல்வதில்லை.

யாக்கோபின் வாழ்க்கையை நாம் உற்று நோக்கினால், அவர் புத்திசாலியாகவும், சாதுரியசாலியாகவும், வியூகம் வகுப்பவராகவும் இருந்ததைக் காண்கிறோம். சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள அவர் அறிந்திருந்தார். வஞ்சகத்தின் மூலம், அவர் தன் சகோதரன் ஏசாவின் மூத்த மகனுக்கான உரிமையைப் பெற்று, தன் தகப்பனின் ஆசீர்வாதத்தைத் திருடினார். தன் சொந்த முயற்சிகளால் தேவனுடைய தயவைப் பெற்றுவிட முடியும் என்று யாக்கோபு நம்பினார் – ஆனால், உண்மையான ஆசீர்வாதம் மனித முயற்சிகளால் அல்ல, தேவனிடமிருந்து மட்டுமே வருகிறது என்பதை அவர் பின்னர் உணர்ந்து கொண்டார்.

ஆகவே, தேவன் அவரை மென்மையாக அல்ல, நெருப்பில் பொன்னைப் புடமிடுவதுபோல புடமிடத் தொடங்கினார். யாக்கோபு உடைக்கப்பட்ட நிலையை அடைந்து, . . . **நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்** ... என்று ஆதியாகமம் 32:26 ல் கூறியபடி கதறும் வரை, வஞ்சகம், கஷ்டம், பயம் மற்றும் போராட்டங்களை அவர் அனுபவிக்க தேவன் அனுமதித்தார்:



**உம்மைப் போகவிடேன்**

இந்த மாற்றம் ஒரே இரவில் நிகழவில்லை. தேவன் யாக்கோபை ஒரு நீண்ட கடினமான பயணத்தின் வழியாக அழைத்துச் சென்றார். ஆயினும், இவை அனைத்தின் மத்தியிலும், தேவனுடைய ஆளுகை காணப்பட்டது. மனிதர்களின் சூழ்ச்சிகளால் யாக்கோபு அழிய அவர் அனுமதிக்கவில்லை. ஏனெனில் அவருடைய திட்டம் யாக்கோபின் தவறுகளைவிடப் பெரியதாக இருந்தது.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

## 1. மனிதர்கள் சதித் திட்டம் தீட்டும்போது, தேவன் தடுக்கிறார்!

யாக்கோபின் வாழ்க்கையில், நாம் ஒரு ஆழமான பாடத்தைக் காண்கிறோம். தன் தகப்பனையும், சகோதரனையும் ஏமாற்றிய பிறகு, யாக்கோபு தன் எதிர்காலத்தைப் பாதுகாத்துவிட்டதாக நினைத்தான். ஆனால், தேவன் அவனுக்கு, **'நானே ஆசீர்வாதத்தின் ஆதாரம்'** என்ற ஒரு ஆழமான உண்மையைக் கற்பிக்க விரும்பினார்:

இதைக் கற்றுக் கொள்வதற்காக, யாக்கோபு தன் மாமனான லாபானுடன் வாழ்ந்தான். லாபான் யாக்கோபு முன் செய்த செயலுக்கேற்ற பலனை அனுபவிக்க செய்தான். லாபான் . . . **என்** (யாக்கோபின்) **சம்பளத்தைப் பத்து முறை மாற்றினான்.** . . . ஆதியாகமம் 31:7. அவன் யாக்கோபை ஏமாற்றவும், வஞ்சிக்கவும், அவனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முயன்றான்.



**என் சம்பளத்தைப் பத்து முறை மாற்றினான்**

ஏமாற்றப்படுவதன் வலியை யாக்கோபு புரிந்து கொள்ளவும், மனித முயற்சியை விட தேவனைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளவும் வேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காக தேவன் இதை அனுமதித்தார்.

ஆயினும், இந்த சுத்திகரிப்பின் போது, தேவன் ஒரு எல்லையை நிர்ணயித்தார். லாபான் தாண்ட முடியாத ஒரு எல்லை இருந்தது. . . . **அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங் கொடுக்கவில்லை.** என்று ஆதியாகமம் 31:7–ல் யாக்கோபு நம்பிக்கையுடன் அறிவித்தான்.

தேவனுடைய பிள்ளைக்கு எதிரான ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு தெய்வீக எல்லை உண்டு என்று இது ஒரு சக்தி வாய்ந்த உண்மையை வெளிப்படுத்துகிறது.

- மனிதனின் ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு எல்லை உண்டு.
- ஒவ்வொரு தாக்குதலும் அவருடைய அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.
- அதனால்தான் நாம் இன்றுவரை பிழைத்திருக்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்** . . . ஏசாயா 54:17.

ஆயுதங்கள் உருவாக்கப்படலாம்.

தாக்குதல்கள் எழும்பலாம்.

உங்கள் குடும்பம், திருமணம், தொழில், ஊழியம் அல்லது அழைப்பிற்கு எதிராகத் திட்டங்கள் தீட்டப்படலாம்.

ஆனால், நாம் கர்த்தரோடு நெருக்கமாக – உண்மையோடும் ஆழமான ஐக்கியத்தோடும் – நடக்கும்வரை, நமக்கு எதிராக எழும்பும் எதுவும் இறுதியில் வெற்றிபெறாது; வாய்க்காது.

மனிதர்கள் சதித்திட்டம் தீட்டும் போது, தேவன் அதைத்தடுத்து நிறுத்துகிறார்.

## 2. கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத ஆபத்துகள் அனைத்திலிருந்தும் தேவன் நம்மைப் பாதுகாக்கிறார்!

நாம் காணக்கூடிய ஆபத்துகளைப் பற்றிப் பெரும்பாலும் சாட்சியிடுகிறோம். ஆனால், தேவன் நம்மைப் பாதுகாக்கும் எண்ணற்ற, கண்ணுக்குத் தெரியாத ஆபத்துகளை நாம் மறந்துவிடுகிறோம்.

லாபான் தனது கூலியை மாற்றியமைத்ததைப் பற்றி யாக்கோபு பேசினார்; ஆனால், அங்கே பல மறைமுகமான அச்சுறுத்தல்களும் இருந்தன. (மிருகங்களால்) **பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவராமல், அதற்காக உத்தரவாதம் பண்ணினேன்; பகலில் களவு போனதையும், இரவு களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர்** ஆதியாகமம் 31:39 –ல் என்று யாக்கோபு கூறினார்.

காட்டு விலங்குகள் மந்தையைத் தாக்கினால், யாக்கோபுக்கும் ஆபத்து நேரிடும் நிலை இருந்தது. திருடர்கள், காட்டு விலங்குகள் மற்றும் இரவுநேரத் தாக்குதல்களால் ஆபத்துகள் இருந்தன; ஆயினும், தேவன் அவரைக் காத்துக் கொண்டார்.



**பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவரவில்லை**

யாக்கோபு ஒவ்வொரு ஆபத்தைப் பற்றியும் தெரிந்திருக்கவில்லை. ஆனால், தேவன் அவை அனைத்தையும் தடுத்து நிறுத்தினார்.

அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு விவரத்தையும் கர்த்தர் அமைதியாகக் கண்காணித்து வந்தார்.

**கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்;**... சங்கீதம் 121:7.

நம்மால் நம் அன்புக்குரியவர்களை எல்லா நேரங்களிலும் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது; ஆனால், தேவனால் முடியும்.

கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ ஆபத்துகளிலிருந்து அவர் நம்மை இரட்சித்திருக்கிறார்.

நாம் கவனிக்கவே செய்யாத எத்தனையோ கண்ணிகளிலிருந்து அவர் நம்மைக் காத்திருக்கிறார்.

அவருடைய இரக்கமே நம்மை உயிரோடு வைத்திருக்கிறது.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும்
**துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2026 ஜூன் 19 முதல் 2026 ஜூலை18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூன் 19 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** 16 மொழிப் பத்திரிகைகளும் ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் பிரசுரமாக ஒத்துழைத்து வரும் இணை ஆசிரியர்களுக்காக ...

ஜூன் 20 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**களின் புதிய மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை ஆசீர்வதித்தமைக்காக...

ஜூன் 21 ⇨ 1969–ம் ஆண்டு முதல், நமது பத்திரிகை ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 22 ⇨ ஏப்ரல் 10, 2026–ல் நடைபெற்ற நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** ஆண்டு விழா மற்றும் மழலையர் பள்ளி பட்டமளிப்பு விழாவை ஆசீர்வதித்த கிருபைக்காக..

ஜூன் 23 ⇨ நமது பங்காளர்களின் ஜெப மற்றும் பொருளாதார உதவிகளுக்காக...

ஜூன் 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் 2025–26–ம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைந்ததற்காக...

ஜூன் 25 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளின் தலைவர்கள் மற்றும் விசுவாசிகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 26 ⇨ நமது மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் 2025–26–ம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைந்ததற்காக...

ஜூன் 27 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளின் **வேனிற்கால சிறுவர் வேதாகமப் பள்ளிகளை** ஆசீர்வதித்தமைக்காக...

ஜூன் 28 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதான கட்டளைப் பங்காளர்கள், விண்ணப்ப பங்காளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் ஆங்கில தேவ செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 30 ⇨ நமது ஊழியத்தின் அனைத்து முயற்சிகளையும் இதுவரை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 01 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்து ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக...

ஜூலை 02 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக ஜெபிக்கும் **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தை** ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக...

ஜூலை 03 ⇨ மே 16, 2026 அன்று நடைபெற்ற நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் முன்னாள் மாணவர்களின் கூடுகையை ஆசீர்வதித்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூலை 04 ⇨ உலகமெங்கும் மரணத்திற்கேதுவான வியாதிகள் மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் விடுதலையாக வேண்டி...

ஜூன் 05 ⇨ நமது இந்த மாதத்தின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

ஜூலை 06 ⇨ போதை பொருட்களுக்கு அடிமையாகி, கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்கு முறையாக செல்லாத இளம்பிராயத்தினர் மற்றும் குழந்தைகள் விடுதலையாக வேண்டி ...

ஜூலை 07 ⇨ உலகமெங்கும் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலம் இரட்சிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பிராயத்தினருக்காக...

ஜூலை 08 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஜூலை 09 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூலை 10 ⇨ தூரதேசங்களில் உள்ள சந்திக்கப்படாத மக்கள் நடுவே, சுவிசேஷ பணியில் ஈடுபட்டிருக்கிற மிஷனரிகளின் தேவபாதுகாப்பிற்காக ...

ஜூலை 11 ⇨ தங்கள் குடும்பத்திலுள்ள இளம் பிராயத்தினர் மற்றும் குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு தேவ வழிகாட்டுதல் கிடைக்க வேண்டி ..

ஜூலை 12 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக ஜெபிக்க **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தில்** அதிகமான தேவமக்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டி...

ஜூலை 13 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பணியாளர்களை சேர்த்திட வேண்டி...

ஜூலை 14 ⇨ உலகம் முழுவதும் பாகுபாடின்றி அனைத்து சபைகளிலும் எழுப்புதலை காண வேண்டி ...

ஜூலை 15 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பம் மற்றும் குழுக்களை கர்த்தர் அனைத்துத் தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டி ...

ஜூலை 16 ⇨ உலகில் ஆண்டவரது இராஜ்யம் கட்டுவதற்கான தரிசனங்களைக் கொடுக்க வேண்டி...

ஜூலை 17 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட ...

ஜூலை 18 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**தேவனிடமிருந்து எதுவும் மறைந்திருப்பதில்லை** என்பதை சங்கீதம் 139 நமக்கு நினைவூட்டுகிறது.

நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் எதுவும் கிடைப்பதாகத் தோன்றாத நேரங்களிலும்கூட, தேவன் திரைக்குப் பின்னால் தம்முடைய கச்சிதமான நேரத்தில் (Kairos) செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தேவன் செயல்படுவதை நம்மால் காண முடியாத நேரங்களிலும்கூட, அவர் நம்மைப் பாதுகாத்து வருகிறார்.

## 3. மனிதத் தீர்மானங்களை தேவன் மாற்றியமைக்கிறார்!

தேவனுடைய பிரியமான பிள்ளையே, உங்கள் வாழ்க்கையைக் குறித்து மனிதர்கள் பல திட்டங்கள் வகுக்கலாம்; ஆனால், மனிதர்கள் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்தையும் மாற்றியமைக்கும் வல்லமை தேவனிடமே உள்ளது.

யாக்கோபின் வாழ்க்கையில், லாபான் பலமுறை விதிமுறைகளை மாற்றிக் கொண்டே இருந்தான்; ஆனால், ஒவ்வொரு முறையும், தேவன் அதன் விளைவை மாற்றியமைத்தார்.

யாக்கோபுக்காக, தேவன் அதைச் செய்தாரென்றால், உங்களுக்காகவும் அவரால் அதைச் செய்ய முடியும்.

உங்களுக்கு எதிராகச் செயல்படும்

- ஒரு தீர்ப்பு
- ஒரு மருத்துவப் பரிசோதனை முடிவு
- ஒரு தேர்வு முடிவு
- மற்றவர்களால் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம்

என சில சூழ்நிலைகள் இருக்கலாம்.

ஆனால் தேவன் இவை அனைத்தையும் மாற்றியமைக்க வல்லவர்.

அவர் சந்நிதியில் வந்து ஜெபிப்பது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டியதாகும்.



**ஜெபிப்பது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டியதாகும்.**

**"ஆண்டவரே, நீர் என் பிதா. நான் உம்முடைய பிள்ளை. தயவு செய்து எனக்கு உதவி செய்யும்."**

நாம் நம்மைத் தாழ்த்தி, நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய உதவியை நாடி வரும்போது, அவர் கருணையோடும், வல்லமையோடும் நமக்குப் பதிலளிக்கிறார்.

. . . **அவர் திறந்தால் யாரும் மூட முடியாது; அவர் மூடினால் யாரும் திறக்க முடியாது** (வெளிப்படுத்தின விசேஷம் 3:7).

மனித அதிகாரமானது உண்மையானதே; ஆனால், தேவனுடைய சர்வவல்லமையே இறுதியானது.

## 4. உங்களுக்கு எதிரான எல்லா அநீதியையும் தேவன் ஆசீர்வாதமான பெருக்கமாக மாற்றுகிறார்!

- சில சமயங்களில், நாம் உண்மையோடு வாழ்ந்தாலும், வாழ்க்கை நியாயமற்றதாகத் தோன்றலாம்.



- நான் தேவனுக்குப் பயந்து நடக்கிறேன். அப்படியிருக்க மற்றவர்களைப்போல நான் ஏன் ஆசீர்வதிக்கப்படுவதில்லை?
- தேவனைப் புறக்கணிப்பவர்கள் மட்டும் ஏன் செழிப்படைவதாகத் தோன்றுகிறது?
- நீதிநெறிகளோடு வாழ்வதில் ஏதேனும் பயன் இருக்கிறதா? என்று நாம் சிந்திக்கக்கூடும்.

அன்பான நண்பர்களே! இவ்வுலகில் செழிப்பதாகத் தோன்றும் காரியங்கள் பெரும்பாலும் தற்காலிகமானவையே. ஆனால், நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு அநீதியையும், தேவன் உங்களைப் பலப்படுத்தவும், பெருகச் செய்யவும், உயர்த்தவும் பயன்படுத்துவார்.

**யாக்கோபை உதாரணமாகப் பாருங்கள்:**

லாபான் 'புள்ளி உள்ளவை' என்று சொன்னபோது, தேவன் மந்தைகளை புள்ளி உள்ளவைகளாக மாற்றினார்.



**தேவன் மந்தைகளை புள்ளி உள்ளவைகளாக மாற்றினார்.**

அவர் 'வரி உள்ளவை' என்று சொன்னபோது, தேவன் அவற்றை வரி உள்ளவைகளாக மாற்றினார்.

லாபான் அவரை எவ்வளவுக்கு அதிகமாக ஒடுக்கினாரோ, அவ்வளவுக்கு அதிகமாக தேவன் அவரைச் செழிப்படையச் செய்தார்.

**...தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற(து)** ... ரோமர் 8:28.

அநீதிகூட தேவனுடைய கைகளில் ஒரு கருவியாக மாறிவிடுகிறது.

உங்களை மோசமாக நடத்துபவர்களுக்குப் பயப்பட வேண்டாம்.

உங்களுக்குத் தீங்கு இழைப்பவர்களால் மனம் தளர்ந்துவிட வேண்டாம்.

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology &
Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
உடனே அணுகவும் !
கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி விநியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின் எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## என் மீட்பர் உயிரோடிருக்கிறார் ... யோபு 19:25.

ஆரம்ப நாட்களில் ஊழியப் பாதையில் பல்வேறு நெருக்கங்களையும் பாடுகளையும் கடந்துவர தேவன் என்னை அனுமதித்தார். குறிப்பாக பொருளாதார நெருக்கடி என்னை அதிகமாக வாட்டி வதைத்தது. தங்குவதற்கும், ஊழியத்தை நிலையான ஒரு இடத்தில் நிறுவவும் எனக்கு வாய்ப்பு இல்லாமல் சென்னைப் பட்டணத்தின் பல இடங்களுக்கு அடிக்கடி என் உறைவிடத்தையும், ஊழிய அலுவலகத்தையும் மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.



1980–ம் ஆண்டு நான் திடீரென்று நோய் வாய்ப்பட்டேன். பல நாட்களாக கடுமையான ஜீரத்தினாலும், உடல் வலியினாலும் பாதிக்கப்பட்டேன். குறிப்பாக, எனது கழுத்துப் பட்டையில் ஒரு பயங்கரமான வலியால் நான் அதிகமாய் அவதிப்பட்டேன். நான் ஊழியம் செய்த இடம் ஓர் கிறிஸ்தவரல்லாத இடமாகும். அங்கு வாழ்ந்த எல்லோரும் என்னை ஓர் அந்நியனாகக் கருதியதாலும் எனக்குப் போதுமான உதவிகளைச் செய்ய யாரும் இல்லை. அப்போது வியாதியும், தனிமையும், எதிர்ப்பான சூழ்நிலைகளும் என்னை நெருக்கியபடியால், ஓர் நண்பரை அழைத்து, என்னுடன் ஓர் நாள் இரவு தங்கும்படி கேட்டுக் கொண்டேன். அதற்கு முன் என்னிடமிருந்து பல உதவிகளைப் பெற்று அனுபவித்தவராயிருந்தும் அந்த குறிப்பிட்ட கஷ்டமான நிலைமையில் அவர் என்னுடன் தங்க முடியாது என்று சொல்லி என்னைத் தனியாக விட்டுச் சென்றுவிட்டார். நான் தனிமை காரணமாகவும் மற்றும் பசியினாலும் அன்று இரவில் மிகவும் அவதிப்பட்டேன்.

மறுநாள் காலையில் சிலராகச் சேர்ந்து என்னை ஓர் அரசாங்க மருத்துவமனையில் சேர்த்துவிட்டுப் போய்விட்டார்கள். அங்கும் வியாதியின் கொடுமையால் மிகவும் சோர்ந்துபோயிருந்தேன். பல நாட்கள் கழித்து, மருத்துவர்கள் எனக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணி, எல்லா முன் ஏற்பாடுகளையும் செய்தார்கள். அந்த நாட்களில் நான் என் சூழ்நிலைகளினிமித்தம் அந்த சிகிச்சையை மேற்கொள்ள விருப்பமற்றவனாக, ஆண்டவரிடம் ஊக்கமாக ஜெபம் பண்ணினேன். உலகப்பிரகாரமான பல வசதிகள் இருந்தும், ஊழியத்தினிமித்தமாக நான் பட்டபாடுகளை ஒவ்வொன்றாக ஆண்டவரிடம் விவரித்துச் சொன்னேன். **என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர்** ... (சங்கீதம் 119:26).



மட்டுமின்றி அன்றைய இரவு வேளையில் நான் ஜெபிக்கிறவேளையில் ஒரு தெய்வீகத் தொடுதலை உணர்ந்தேன். என் வியாதி சுகமடைந்தது போல் எனக்கு சரீரத்தில் ஒரு விடுதலையை



நான் உணர முடிந்தது. அதனை நான் முழுமையாக விசுவாசித்து அடுத்த நாள் காலையில் நான் சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் சென்று நடந்த சம்பவத்தைக் கூறினேன். அப்போது அவர் என் மேல் மனதுருகி, "ஐயா, சில கிறிஸ்தவர்கள் இப்படித்தான் ஏதாவது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும்போது, இயேசு நாதர் சுகம் தந்தார் என்று சொல்லி விட்டுப் போய்விடுகிறார்கள். நீங்களும் அப்படித்தான் சொல்லுகிறீர்கள்" என்று கூறி என்னை எந்த வித சிகிச்சையும் அளிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். கர்த்தரை நான் எப்படி நம்பினேனோ அப்படியே அவர் எனக்குச் செய்தார்.



கர்த்தர் எனக்குப் பரிபூரண சுகத்தைத் தந்தார். சுமார் 46 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வியாதி அதற்குப்பின் எனக்கு வந்ததே இல்லை. சில வேளைகளில் பல மணிநேரம் கரடு முரடான சாலைகளிலும் நான் வாகனம் ஓட்ட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் கூட எனக்கு அந்த கழுத்து வலியோ, முதுகு வலியோ வருவதே கிடையாது. தொடர்ந்து ஒரு நாளைக்கு 20 மணி நேரம் நான் சுவிசேஷ வேலையினிமித்தமாக அலுவலகம் மற்றும் பிரசங்க ஊழியங்கள் செய்கிறேன். ஆனால் சாதாரணமாக நான் களைப்படைவதில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அற்புத சுகத்தை அளித்ததுமன்றி, அன்று ஒரு நண்பர்தான் என்னைக் கைவிட்டார். இன்று பல்லாயிரக் கணக்கான நண்பர்களை உலகமனைத்திலும் எனக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தந்து என்னையும் என் ஊழியத்தையும் ஆசீர்வதித்தார்.

அன்பு நண்பரே, இயேசு கிறிஸ்து ஆண்டவர் மிகவும் வித்தியாசமானவர்; உயர்ந்தவர். அவர் ஒருவர் மாத்திரம் நமக்கு உண்மை நண்பராகவும், ஆண்டவராகவும், எஜமானராகவும் இருப்பாரானால் இருளும், நம்பிக்கையற்றதுமான இந்த உலகத்தில் நம்மை சரியான நேரத்தில், சரியான வழியில் நடத்துவார். நீங்கள் அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்யுங்கள். உங்களை நிச்சயமாகவே நல்ல பாதுகாப்பான வழியில் நடத்துவார். என்னை இன்று வரை நடத்துகிறார். உங்களையும் அப்படியே நடத்துவார்

**.... நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.** ஏசாயா 43:19.

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

சத்துரு தீமைக்காகத் திட்டமிடுவதை, தேவன் நன்மையாக மாற்றிவிடுவார்.

அவரை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அவர் ஒவ்வொரு அநீதியையும் ஆசீர்வாதமான பெருக்கமாக மாற்றித் தருவார்.

## 5. தேவன் உங்களை ஒரு சூழ்நிலைக்குள் அனுமதித்தால், அதிலிருந்து உங்களை பத்திரமாக வெளியே கொண்டு வருவார்!

யாக்கோபு தன் தந்தையின் வீட்டை விட்டு, தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்; அப்போது அவரிடம், ... **நான் ... கர்த்தர் ... நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்** என்று ஆதியாகமம் 28:13–ல் கூறிய தேவனுடைய வாக்குத்தத்தத்தைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

அவர் வெறுங்கையோடும், பயத்துடனும் தன் எதிர்காலத்தை குறித்த நிச்சயமற்ற நிலையுடனும் அங்கிருந்து புறப்பட்டார்.

ஆரம்பத்தில், லாபானின் வீட்டில் யாக்கோபின் வாழ்க்கை சாதகமாகவே தோன்றியது. ஆனால் காலப்போக்கில், அது விரோத மனப்பான்மையாக மாறியது. லாபானும் அவனுடைய குமாரரும் பொறாமை கொண்டனர்; அவர்களுடைய மனப்பான்மையும் மாறிப்போனது.

**... யாக்கோபு லாபானின் முகத்தைப் பார்த்தான் ... அது முன்புபோல அவனுக்குச் சாதகமாக இருக்கவில்லை** (ஆதியாகமம் 31:2,5).

யாக்கோபு இன்னல்களைச் சந்தித்த போதிலும், தேவன் அவரோடு இருந்தார்.

அதற்கான காலம் வந்தபோது, தேவன், 'திரும்பிச் செல்' என்று கூறினார்.

லாபான் யாக்கோபை வெறுங்கையோடு அனுப்பிவிடத் திட்டமிட்டிருந்த சமயத்திலும்கூட, தேவன் அதில் தலையிட்டார்.

**என் பிதாவின் ... தேவனும் ... என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்.** . . என்று ஆதியாகமம் 31:42–ல் யாக்கோபு சாட்சியளித்தார்.

ஆனால் தேவன், லாபானின் திட்டத்திற்கு இடமளிக்கவில்லை. அவர் அனைத்தையும் மீட்டளித்து, தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்.

தேவன் எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிறார். நீங்கள் பதவி உயர்வுக்காகவோ, முன்னேற்றத்திற்காகவோ, ஒரு திருப்புமுனைக்காகவோ, காத்திக்கிறீர்களென்றால், தேவன் உங்களுக்கு இதை நினைவூட்டுகிறார்.

தேவன், 'இதுவே ஏற்ற காலம்' என்று சொல்லும்போது, எவராலும் உங்களைத் தடுத்து நிறுத்த இயலாது.

துணிச்சலோடு இருங்கள்.

பெலனோடு இருங்கள்.

ஏற்ற நேரத்தில், தேவன் உங்களுக்காக வேறொரு வாசலைத் திறப்பார்.

அன்பான நண்பர்களே, மனிதர்கள் நமக்கு எதிராகச் சதித்திட்டங்களை வகுக்கலாம். எதிரி நமக்கு முன்பாகக் கண்ணிகளை விரிக்கலாம். ஆனால், அவை நம்மை அழிப்பதற்குத் தேவன் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்.

நாம் அவருடைய வாக்குத்தத்தங்களை உறுதியாகப்பற்றிக் கொள்ள வேண்டும்.

**உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக் கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.** உபாகமம் 28:7

நாம் எந்த எதிர்ப்பை எதிர்கொண்டாலும், தேவன் நம்முடன் நிற்கிறார். அவருடைய வார்த்தை நமக்கு நினைவூட்டுகிறது.

**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.** சங்கீதம் 34:19.

**அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.** சங்கீதம் 91:15.

தேவன் தொலைவில் இல்லை. அவர் நம்முடன் இருக்கிறார். ஒவ்வொரு சோதனையிலும் அவர் நம்மைக் காப்பாற்றும் வரை நம்முடன் நடக்கிறார்.

அவர் உங்களைக் கைவிடமாட்டார்.

அவர் உங்களை மறக்கவும் மாட்டார்.

உங்களுக்காக அவர் ஆயத்தப்படுத்தியிருக்கும் தீர்மானத்தை அழிக்க எதையும் அவர் அனுமதிக்க மாட்டார்.

அவருடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்ளுங்கள்:

... **ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன்**... ஆதியாகமம் 15:1

(மேலே ஆபிராமிற்கு பதிலாக உங்கள் பெயரை எழுதுங்கள். அவருடைய வாக்குத்தத்தம் ஒவ்வொருவருக்குமானது; தனிப்பட்டது). இந்த மாதம் உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையட்டும்! ஆமென்.

************

### அறிவிப்பு

(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள். – ஆசிரியர்


நெகேமியா வேதாகமக் கல்லூரி

AN ECHO OF HIS CALL INSTITUTION

மாலைநேர வகுப்புகள் - தமிழ் & ஹிந்தி

26வது பட்டமளிப்பு விழா

4, ஜூலை 2026 சனிக்கிழமை, மாலை 5:00 மணி



சிறப்பு விருந்தினர்:

REV. DR. S.J. கிங்ஸ்லி,

(COO, JESUS CALLS)

இடம் : ஸ்கிட்மோர் ஹால்

பாலர் கல்வி நிலைய அரங்கம், எம். ஆர். சி. சென்டர்,

5/6, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை – 600 007.

❋ 2026 – 2027 ம் வருட தமிழ் & இந்தி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது!

❋ அர்ப்பணிப்புள்ள மாணவர்களை தெரியப்படுத்துங்கள்!!

❋ 2026–27–ம் ஆண்டிற்கான வகுப்புகள் 01–06–2026 அன்று ஆரம்பிக்கப்படும்!!!!

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

❋ வகுப்புகள் நடைபெறும் இடங்கள் : சேப்பாக்கம், வேளச்சேரி, சந்தோஷபுரம் ❋

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |

SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 29th MAY 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**